In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உ

சுப்ரபேதாகமம் ஞானபாதம்

வெளியீடு : வேதாகம அகாடமி

திருநள்ளாறு ஸ்ரீ ப்ராணாம்பிகா ஸமேத தர்பாரண்யேஸ்வர ஸ்வாமி ஆலய மஹா கும்பாபிஷேக வெளியீடு

நாள் : தை 28 (11.02.2019) திங்கள்கிழமை

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஸர்வஸாதகம் ப்ரதிஷ்டா பூஷணம்

சிவஸ்ரீ S.D. அய்யாசாமி சிவாச்சாரியார்

ஸ்ரீமதி ஞானாம்பாள் தம்பதிகள்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உ

சுப்ரபேதாகமம் ஞானபாதம்

திருநள்ளாறு
ஸ்ரீ ப்ராணாம்பிகா ஸமேத
தர்பாரண்யேஸ்வர ஸ்வாமி ஆலய
மஹா கும்பாபிஷேக வெளியீடு

நாள் : தை 28 (11.02.2019) திங்கள்கிழமை

வெளியீடு : வேதாகம அகாடமி

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நூல் : சுப்ரபேதாகமம் ஞானபாதம்

எழுத்துரு : க்ரந்தம், தமிழ்

நூல் தொகுப்பாசிரியர் : சிவஸ்ரீ M.N. கல்யாணசுந்தரசிவாச்சாரியார் M.A.,
சிவஸ்ரீ அகிலாண்டம் ப்ரஸாத் சிவம்

இரண்டாம் பதிப்பு : 2019

நாள் : தை 28 (11.02.2019)

பக்கம் : 72

அளவு : 18 x 24cm

ப்ரதிகள் : 1000

அச்சிட்டோர் : பாரதி மிகுமின் அச்சகம்
கணபதி நகர், மயிலாடுதுறை
செல் : 98430 86460

பதிப்புரிமை : வேதாகம அகாடமி

பொருளடக்கம்

ஸுப்ரபேதம் ஞானபாதம்

முன்னுரை

வாழ்த்துரை

1. சிவ ஸ்ருஷ்டிவிதி படலம் 1
2. பசு ஸ்ருஷ்டி விதி படலம் 15
3. அத்துவா விதி படலம் 22

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

முன்னுரை

"அஞ்சொ டிருபத்து மூன்றுள ஆகமம்" என திருவாகமங்களின் எண்ணிகையை கூறுவார் திருமூலர்.

காமிகம் முதல் வாதுளம் வரையுள்ள இருபத்தி எட்டு சிவாகமங்களும் பரம்பொருள் நல்கிய அருட்கொடையாகும்.

சர்யை, கிரியை, யோகம், ஞானம் எனும் நான்கு பகுப்புகளை கொண்ட இச்சிவாகமங்களுள் ஞானபாதம் தலையாயது. இதுவே சமய தத்துவ கருத்தியல்களை விளக்கும் பகுதியாகும்.

பசுக்களாகிய ஆன்மாக்களுக்கு பாசமுக்தி தந்து பதியாம் சிவம் ஆட்கொண்டு அனுக்ரஹிக்கும் தன்மையை விளக்கி இயம்புவது, அதற்கான சோபானக்ரமங்களை (படிநிலை முறைமையை) விவரிப்பது என பொருளார்ந்த தத்துவபேடகமாய் ஞானபாதங்கள் திகழ்கின்றன.

சிவாகம-தரு வின் கணிபிழிந்த ரஸசமாய் திகழும் ஞானபாத பகுதி இன்னமும் முழுதாய் சுவைக்கப் படமால் உள்ளது. நமது வேதாகம அகாடமி அக்குறையை நிவர்திப்பதில் முனைப்போடு பணியாற்றுகிறது. ஆகமங்களின் அறிவுச்செழுமை, தத்துவ அடர்வு ஞான பாதங்களின் வாயிலாகவே தரிசனப்படுகிறது.

போஜதேவரின் தத்வப் பிரகாசிகை, சத்யோ ஜோதியின் தத்வ சங்க்ரஹம்-,தத்வத்ரய நிர்ணயம்,போககாரிகை, பரமோக்ஷ நிராச காரிகை, ஶ்ரீகண்டரின் ரத்னத்ரயம்,பட்டராம கண்டரின் நாதகாரிகை, இவை அனைத்தும் சைவாகமஞானபாதத்தின் சாரம்சமாய் உதித்த நூல்கள். ஏன் தமிழில் மெய்கண்டாதி சாஸ்த்ரநூல்கள் என போற்றப்படும் அனைத்துமே சைவாகமஞானபாதத்தின் சாரநூல்கள்தான்.

இத்தகைய சைவசமய தத்துவகளஞ்சியமாய் விளங்கும் ஞானபாத நூல்களுள் சுப்ரபேதாகம ஞானபாதத்தை பொருளுரையோடு வெளியிடுகிறோம்.

ஆகமங்கள் சிவ பேதங்கள், ருத்ர பேதங்கள் என இரு பெரும் பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளன.

காமிகம் முதல் சுப்பிரபேதம் வரையான பத்தும் சிவபேத ஆகமங்களாகும். விஜயம் முதல் வாதுளம் வரையான பதினெட்டும் உருத்திரபேத ஆகமங்களாகும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இதில் சிவபேத பகுப்பின் ஒர் பகுதியாய் விளங்கும் சுப்ரபேத ஆகமத்தின் ஞானபாதம் (நாங்களறிந்தவரை) எவரும் பொருளுரையோடு வெளியிட்டதாக செய்தியில்லை.

வேதாகம அகாடமியின் ஞானபாத நூல்பெருக்கு ஆர்வம், குருநாதர்களின் அனுக்ரஹம் உந்துசக்தியாய் திகழ்ந்து இதை சாத்யமாக்கியிருக்கிறது.

இது போன்ற வெளியீடுகள் சைவாகமங்கள் என்பவை வெறும் வழிபாட்டு முறைகளை கூறும் நூல்வகை என்ற எண்ணத்தை தகர்த்து அவை சைவபெருமதத்தின் மூலஸூத்ரங்கள் என்ற பேருண்மை புலப்பட ஹேதுவாய் அமையும் எனலாம்.

திருநள்ளாறு மஹாகும்பாபிஷேக நன்னிகழ்வில் இன்னூல் மலர்வது பெரும் மகிழ்வை தருவதாய் அமைகிறது.

இமைப்பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க என்கிற கோட்பாட்டின்படி சித்தத்தில் சிவனடியே வைத்து அஹம்படிமைத் தொண்டாற்றி, தர்பாரண்யேஸ்வரப் பெருமானை முப்போதும் திருமேனி தீண்டி பூசனை செய்ததின் பாக்கியம் மூன்றாவது முறையாக

இக்கும்பாபிஷேகத்திற்கு சர்வசாதகராய் தொண்டாற்றிய பெருமை சிவஸ்ரீ S.D.அய்யாசாமி சிவாச்சாரியார் அவர்களையே சாரும். சைவ உலகம் போற்றும் இத்திருத்தலத்தில் தனது மனம் மொழி மெய்களால் தர்பாரண்யேஸ்வரரை பூசனை புரிவதை கண்டு உள்ளம் குளிர்ந்த பக்தர்கள் ஏராளம் .

இம்மலரை திருச்சி மலைக்கோட்டை ஸ்ரீஸுகந்தகுந்தளாம்பிகா ஸமேத ஸ்ரீகல்யாணமாத்ருபூதேஸ்வரப் பெருமானின் பரிபூரண அனுக்ரஹம் பெற்ற சிவஸ்ரீ M.A.திருஞானசம்பந்தமூர்த்தி சிவாச்சாரியாரின் திருவடிக்கமலங்களுக்கு ஸமர்ப்பிக்கின்றோம்.

சைவப்பேருலம் உவக்கும் வண்ணம் இது போன்ற ஞானத்திருப்பணிகளை ஆற்றிட இந்த மஹாகும்பாபிஷேக ஏற்றருள் நாயகன் ஸ்ரீ ப்ராணாம்பிகை உடனமர் ஸ்ரீ தர்பாரண்யேஸ்வர பெருமான் அருள்செய்வானாக.

நமஸ்காரங்களுடன்..
அஹம்படிமைதொண்டன்
M.N.கல்யாணசுந்தர சிவாச்சாரியார்
வேதாகம அகாடமி.
ஆகம ஆராய்ச்சி குழுமம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உ
குருபாதம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமை ஆதீனம்
இளைய சந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ மாசிலாமணி தேசிக ஞானசம்பந்த சுவாமிகள்

தருமபுரம்
மயிலாடுதுறை (அஞ்சல்) 609 001.

"ஞாலம் நின்புகழே மிகவேண்டும் தென்
ஆலவாயில் உறையும்எம் ஆதியே"

வாழ்த்துரை

அம்மானே ஆகமசீலர்க்கு அருள் நல்கும்
பெம்மானே பேரருளாளன் பிடவூரன்
தம்மானே தண்டமிழ் நூற்புல வாணர்க்கோர்
அம்மானே பரவையுண் மண்டளியம்மானே - சுந்தரர்

வேதமொடு ஆகமம் மெய்யாம் இறைவன் நூல் என்பது ஆன்றோர் வாக்கு. ஒரு ஆலயத்தை அமைக்க நிலத்தைத்தேர்வு செய்வது பூமிபூஜையுடன் முதற்கல் தாபனம் சங்குத்தாபனம் முதல், சிற்பசாத்திர இலக்கணப்படி அமைத்து தெய்வத்திருமேனிகளைத்தாபித்து கும்பாபிஷேகம், நித்ய நைமித்திக காம்ய பூசைகளும் மகோற்சவமும் நிகழ்த்திட சிவாகமங்களே மூலநூல்களாம் என்பது தெளிவு. அவ்வழியில் சிவபரம்பொருள் அருளியது இருபத்தெட்டு ஆகமங்களாகும். இவற்றுள் சரியை கிரியை யோகம் ஞானம் எனும் நான்கு பாதங்களும் அடங்கும். கிரியைகள் கூறுமிடத்து, மேற்படி ஆலய விஷயங்களுடன் சமய விசேட நிருவாண தீக்கைகளை ஆசாரியரிடத்தில் பெறுதலும், அவ்வுபதேச வழிநின்று சைவநெறி ஒழுகதலும் இயம்புகிறது.

இனி, ஞானபாதம் ஆவது ஆன்மபோதமேயாம். சீவன் சிவத்தொடு ஒருநிலைப்படுதற்கு வழி ஞானமேயாதலின், இவ்வழிகூறும் ஆகமமும் ஞானபாதமென்றே போற்றப்படுகிறது. சில ஆண்டுகளுக்கு முன்னர் காமிக ஆகமத்தின் பூர்வபாகம் தென்னிந்திய அர்ச்சக சங்கத்தினரால் வெளியிடப்பட்டபோது தருமையாதீனம் நந்தமர் குருமணிகளாகிய ஸ்ரீலஸ்ரீகுருமகாசன்னிதானம் அவர்கள் அருளிய ஆசியுரையும் இங்கு சிந்திக்கத்தக்கது. ஞானம் ஆவது கலைஞானம் மெய்ஞானம் என இருவகைத்தாம். படித்து அறிவது கலைஞானம். உபதேசத்தால் உணர்வது மெய்ஞானம். ஆகமங்கள் மெய்ஞான நூல்களாகும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தற்போது கிடைத்துள்ள ஆகம நூல்களில் சரியை கிரியை யோகம் ஞானம் எனும் நான்குபாதங்களும் நிறைவாக உள்ளது சுப்பிரபேத ஆகமமேயாகும் என்பர். இதில் இதுநாள் வரை சைவ உலகிற்கு ஆகம ஞானபாதச் செய்திகள் தக்க உரையுடன் வெளிவந்தில.

இந்நிலையில் திருநள்ளார் அருள்மிகு தர்ப்பாரண்யேசுவரர் ஆலய மகாகும்பாபிஷேகப் பெருவில் ஸ்ரீமத் சுப்பிர பேதாகம ஞானபாதம் தமிழுரையுடன் வெளியிடப்படுவது சைவப்பேருலகு செய்த தவப்பயனேயாகும். இந்நூலை திருச்சி மலைக்கோட்டை ஸ்ரீதாயுமானவசுவாமி தேவஸ்தான அர்ச்சகர் மரபில் உதித்து லண்டன் லூஷியம் ஸ்ரீமுருகப்பெருமான் ஆலயத்தில் பூஜை செய்து வருபவரும், வேதாகம அகாடமி நிறுவனருமாகிய சிவஸ்ரீ ந.கல்யாணசுந்தர சிவாசாரியார் சிறப்பாக வடிவமைத்துள்ளது பாராட்டத்தக்கது.

மேலும் தொடர்ந்து மூன்றுமுறையாக திருநள்ளார் ஆலய மகாகும்பாபிஷேகத்தை சர்வசாதகராக நடத்தும் சிவஸ்ரீ அய்யாசாமி குருக்கள் தருமையாதீனம் வேத ஆகம பாடசாலையில் பயின்ற மாணவர் என்பது குறிப்பிடத்தக்கதாகும். அவரது அரும்பணியைப் பாராட்டும் வகையிலும் இந்நூலை வெளியிடுவதில் மகிழ்கிறோம்.

சிவாகமங்களை அருளிய பெருமானே ஆதிசைவர்களையும் தோற்றுவித்து தமது பூசனைகளைப்புரிய அருளியுள்ளதை சிந்திக்கும் வகையில் சிவாசாரியார்கள் வேத ஆகமங்களைக்கற்றும் ஆத்மார்த்த பரார்த்த பூசைகளையே தம் வாழ்நாள் தொண்டாகக் கொள்ளுதல் அவசியம் எனவும், தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசன்னிதானம் அவர்களின் ஆசியாக வாழ்த்துகிறோம். இந்நூல் சிறப்புற வெளியிடவும், மேன்மைகொள்சைவநீதி உலகமெலாம் விளங்கிடவும் செந்தமிழ்ச்சொக்கன் திருவடிகளை வாழ்த்துகிறோம்.

இங்ஙனம்

மாசிலாமணிதேசிகஞானசம்பந்தர்.

ஸ்ரீலஸ்ரீ மாசிலாமணிதேசிக ஞானசம்பந்தசுவாமிகள்

இளையசன்னிதானம்

தருமையாதீனம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உ
Sivamayam

SIVAGAMA KALANIDHI, SIVAGAMA CHELVAR, SAIVA SIDHDHANTHA SARABHAM

A.V. SWAMINATHA SIVACHARIYAR

FOUNDER & PRINCIPAL

SIVAPURAM VEDA SIVAGAMA PATASALAI, MAYILADUTHURAI.

Email : avssivachariyar@yahoo.com Web Site : www. sivapuramtrust.com

RESI :
No.41,4th Cross Anna Nagar,
Dharmapuram Road,
Mayiladuthurai - 609 001.
Tamilnadu, S. India.
☎ : 04364 - 226440
📱 : 9443126440

PATASALAI :
No. 32, Mayuranathar South Street,
Mayiladuthurai - 609 001.
☎ : 04364 - 223939

Date : ____________

மகிழ்வுரை

எல்லாம்வல்ல உமையொருபாகனின் திருவருளையும் குருவருளையும் வணங்கி மகிழ்கிறோம்.

திருநள்ளாறு ஸ்ரீ ப்ராணாம்பிகை உடனமர் ஸ்ரீ தர்பாரண்யேஸ்வர பெருமானின் மஹாகும்பாபிஷேக நிகழ்வில் சுப்ரபேதாகம ஞானபாதம் தமிழுரையுடன் மலர்வது பெரும் மகிழ்வை தருவதாய் அமைகிறது.

சமீபத்தில் ஸ்ரீமத்சுப்ரபேதம் முழுமையான நூலாக லண்டன் வேதாகம அகாடமி குழும நிறுவனர் கல்யாண்ஜியின் பெருமுயற்சியினால் வெளியிடப்பட்டது. அந்நூலுக்கு எழுதிய வாழ்த்துரையில் அந்நூலைப்பற்றிய பெருமைகளை விரிவாகப் பதிவிட்டுள்ளோம். இங்கு ஞானபாதம சிவஸ்ரீ கல்யாணகுருஜியினால் உபதேசிக்கப்படுவதாக அறிகிறோம். சரியை கிரியை யோகம் ஞானம் எனும் நான்கு பாதங்களையும் தன்னகத்தே கொண்ட ஒரே ஆகமம் ஸ்ரீமத் சுப்ரபேதமாகும். கிடைத்தற் அரிதாகிய நிலையில் எளிதில் எல்லோருக்கும் விளங்கும் வண்ணம் இந்நூலை முழுமையாகவும்பகுதிப்பகுதிகளாகவும் வெளியிடும் முயற்சிப் பாராட்டுதலுக்குறியதாகும்

திருநள்ளாறு ஸ்ரீ ப்ராணாம்பிகை உடனமர் ஸ்ரீ தர்பாரண்யேஸ்வர பெருமானின் மஹாகும்பாபிஷேகத்தை மூன்றாவது முறையாக ஸர்வஸாதக பொறுப்பேற்று நடத்தும் சிவஸ்ரீ S.D .அய்யாசாமி சிவாச்சாரியார் அவர்களது ஆன்மார்த்தமான

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பணி போற்றுதலுக்குறியது. அண்ணாரது ஸர்வஸாதகத்தினை சிறப்பிக்கும்பொருட்டு இந்நூல் வெளிவருவதை எண்ணி அகமகிழ்கிறோம்.

ஸ்ரீமத்சுப்ரபேதாகம ஞானபாதம் வெளியிடுவதையும் போற்றி மகிழ்வதுடன் எல்லாம்வல்ல உமையொருபாகனின் திருவருளால் சகலக்ஷேமங்களும் பெற்று நீடுவாழ வாழ்த்தி மகிழ்கிறோம்.

இங்ஙனம்,

(A.V.சுவாமிநாத சிவாச்சாரியார்)

ஏ.வி.சுவாமிநாதசிவாசாரியார்
மயிலாடுதுறை
தமிழ்நாடு

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உ
ஸ்ரீ கற்பகவிநாயகர்துணை

ஸுப்ரபேதம் ஞானபாதம்

சிவ ஸ்ருஷ்டிவிதி படலம்

க. 𑌶𑌿𑌵𑌸𑍃𑌷𑍍𑌟𑌿𑌵𑌿𑌧𑌿𑌪𑌟𑌲𑌃 |

𑌅𑌥𑌾𑌤𑌃 𑌸𑌂𑌪𑍍𑌰𑌵𑌕𑍍𑌷𑍍𑌯𑌾𑌮𑌿 𑌜𑍍𑌞𑌾𑌨𑌪𑌾𑌦𑌂 𑌸𑌮𑌾𑌸𑌤𑌃 |
𑌤𑌸𑍍𑌯𑌾𑌦𑍌 𑌶𑌿𑌵𑌸𑍃𑌷𑍍𑌟𑌿𑌂 𑌚 𑌶𑍃𑌣𑍁𑌷𑍍𑌵𑍈𑌕𑌾𑌗𑍍𑌰𑌮𑌾𑌨𑌸𑌃 || க-க

விநாயகனே ! (சரியை, கிரியை, யோகம் ஆகிய மூன்று பாதங்களையும் கேட்டு முடித்திருக்கிறாய்) இப்பொழுது ஞானபாதத்தை சுருக்கமாக சொல்கிறேன். அதனுடைய தொடக்கத்தில் சிவ சிருஷ்டியை பற்றி ஒருமுகச் சிந்தனையுடன் கேட்பாயாக. 1

𑌜𑍍𑌞𑌾𑌨𑌂 𑌪𑍍𑌰𑌵𑌰𑍍𑌤𑌤𑍇 𑌵𑌤𑍍𑌸 𑌹𑍍𑌯𑌜𑍍𑌞 𑌨𑌿𑌰𑌾𑌶𑌨𑌾𑌯 𑌚 |
𑌅𑌧𑍍𑌵𑌶𑍍𑌰𑍇𑌣𑌿 𑌵𑌿𑌨𑌾𑌶𑌾𑌯 𑌶𑌿𑌵𑌵𑍍𑌯𑌕𑍍𑌤𑌿𑌕𑌰𑌾𑌯 𑌚 || க-உ

குழந்தாய் (விநாயகனே) அறியாமையை போக்குவதற்கும், அத்துவா நிலைகளை அழிப்பதற்கும், சிவனை வெளிப்படுத்துவதற்கும் உண்டானது ஞானம் என்பதாகும். 2

𑌅𑌨𑍍𑌧𑌕𑌾𑌰𑌵𑌦𑌜𑍍𑌞𑌾𑌨𑌂 𑌜𑍍𑌞𑌾𑌨𑌂 𑌦𑍀𑌪𑌵𑌦𑍁𑌚𑍍𑌯𑌤𑍇 |
𑌜𑍍𑌞𑍇𑌯𑌂 𑌭𑌾𑌸𑍍𑌕𑌰𑌵𑌤𑍍𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌤𑌂 𑌪𑌶𑍍𑌚𑌾𑌜𑍍 𑌜𑍍𑌞𑌾𑌨𑌂 𑌵𑌿𑌨𑌶𑍍𑌯𑌤𑌿 || க-ங

அஞ்ஞானம் இருளைப்போன்றதாகும், ஞானம் விளக்கைப் போன்றதாகும். அறியப்படும் பொருள் (சிவன்) சூரியனைப் போன்றதாகச் சொல்லப்பட்டுள்ளது. பிறகு ஞானமானது அழிகிறது. 3

𑌪𑌾𑌶𑌜𑌾𑌲𑌾𑌨𑌿 𑌵𑌿𑌚𑍍𑌛𑍇𑌦𑍍𑌯 𑌦𑍀𑌕𑍍𑌷𑌾𑌦𑌿 𑌜𑍍𑌞𑌾𑌨𑌮𑍁𑌚𑍍𑌯𑌤𑍇 |
𑌪𑌶𑍁𑌪𑌾𑌶𑌪𑌤𑌿𑌤𑍍𑌵𑌞𑍍𑌚 𑌜𑍍𑌞𑌾𑌨𑍇𑌨𑌾𑌜𑍍𑌞𑌾𑌯𑌤𑍇 𑌬𑍁𑌧𑍈𑌃 || க-ச

பாசக்கூடங்களை அழிப்பதினாலே தீக்கை முதலிய ஞானத்தை அடைகிறான். அறிவாளிகள் ஞானத்தால் பதி பசு பாசம் ஆகிய தன்மைகளை அறிகிறார்கள். 4

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பணி போற்றுதலுக்குறியது. அண்ணாரது ஸர்வஸாதகத்தினை சிறப்பிக்கும்பொருட்டு இந்நூல் வெளிவருவதை எண்ணி அகமகிழ்கிறோம்.

ஶ்ரீமத்சுப்ரபேதாகம ஞானபாதம் வெளியிடுவதையும் போற்றி மகிழ்வதுடன் எல்லாம்வல்ல உமையொருபாகனின் திருவருளால் சகலக்ஷேமங்களும் பெற்று நீடுவாழ வாழ்த்தி மகிழ்கிறோம்.

இங்ஙனம்,

(A.V.சுவாமிநாத சிவாச்சாரியார்)

ஏ.வி.சுவாமிநாதசிவாசாரியார்
மயிலாடுதுறை
தமிழ்நாடு

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உ
ஸ்ரீ கற்பகவிநாயகர்துணை

ஸுப்ரபேதம் ஞானபாதம்

சிவ ஸ்ருஷ்டிவிதி படலம்

க. ஶிவஸ்ருஷ்டிவிதிபடலஃ |

அதாதஸ்ஸம்ப்ரவக்ஷ்யாமி ஜ்ஞாநபாதம் ஸமாஸதஃ |
தஸ்யாதௌ ஶிவஸ்ருஷ்டிஞ்ச ஶ்ருணுஷ்வைகாக்ரமாநஸஃ || க-க

விநாயகனே ! (சரியை, கிரியை, யோகம் ஆகிய மூன்று பாதங்களையும் கேட்டு முடித்திருக்கிறாய்) இப்பொழுது ஞானபாதத்தை சுருக்கமாக சொல்கிறேன். அதனுடைய தொடக்கத்தில் சிவ சிருஷ்டியை பற்றி ஒருமுகச் சிந்தனையுடன் கேட்பாயாக. 1

ஜ்ஞாநம் ப்ரவக்ஷ்யதே வத்ஸ ஹாநி நிர்மூலநாய ச |
அத்வாஶ்ரேணி விநாஶாய ஶிவவ்யக்திகராய ச || க-உ

குழந்தாய் (விநாயகனே) அறியாமையை போக்குவதற்கும், அத்துவா நிலைகளை அழிப்பதற்கும், சிவனை வெளிப்படுத்துவதற்கும் உண்டானது ஞானம் என்பதாகும். 2

அந்தகாரவதஜ்ஞாநம் ஜ்ஞாநம் தீபவதுச்யதே |
ஜ்ஞேயம் பாஸ்கரவத்ப்ரோக்தம் பஶ்சாத் ஜ்ஞாநம் விநஶ்யதி || க-ங

அஞ்ஞானம் இருளைப்போன்றதாகும், ஞானம் விளக்கைப் போன்றதாகும். அறியப்படும் பொருள் (சிவன்) சூரியனைப் போன்றதாகச் சொல்லப்பட்டுள்ளது. பிறகு ஞானமானது அழிகிறது. 3

பாஶஜாலாநி விச்சேத்ய தீக்ஷாதி ஜ்ஞாநமுச்யதே |
பஶுபாஶபதித்வஞ்ச ஜ்ஞாநேநாஶ்ரயதே புதஃ || க-ச

பாசக்கூடங்களை அழிப்பதினாலே தீக்கை முதலிய ஞானத்தை அடைகிறான். அறிவாளிகள் ஞானத்தால் பதி பசு பாசம் ஆகிய தன்மைகளை அறிகிறார்கள். 4

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஜ்ஞானேனைவ து கைவல்யப்ராப்திஸ்தஸ்ய ந ஸம்ஶய: |
ஶிவாத்யவநிபர்யந்தம் லக்ஷணம் ஶ்ருணு ஸாம்ப்ரதம் || க-ரு

ஞானத்தால்தான் வீடுபேறு கிடைக்கிறது.அதில் ஐயம் இல்லை.இப்பொழுது சிவன் தொடங்கி அவனி வரை உள்ள இயல்புகளை கேட்பாயாக. 5

யோகினாமுபகாராய மோக்ஷார்த்தம் புக்தயே ததா |
ஸ்ருஷ்ட்யர்த்தம் ஸர்வஜந்தூநாம் ததா ஸ்ருஷ்டித்வயம் ஸ்ம்ருதம் || க-சு

யோகிகளுக்கு உதவுவதற்காகவும், வீடுபேறு பெறுவதற்காகவும், உலக வாழ்வில் உள்ள சுகங்களுக்காகவும், எல்ல உயிர்களுடைய படைப்பு களுக்காகவும், (சிவன் தொடங்கி அவனி வரை உள்ள இயல்புகளை நான் கூற தொடங்கியிருக்கின்ற அதில்) இறைவனின் ஸ்ருஷ்டியானது இரண்டு வைக்கப்பட்டதாக சொல்லப்படுகிறது. 6

ஶிவஸ்ருஷ்டிஸ்தயா பூர்வா பஶுஸ்ருஷ்டிர்த்விதீயகா |
ஶுத்தைவ ஸமாயுக்தா ஶிவஸ்ருஷ்டிருதீரிதா || க-எ
மலேனாவ்ருத்ய ஶுத்தாத்மா பஶுஸ்ருஷ்டி: ப்ரகீர்த்திதா |

அவற்றுள் முதலாவது சிவ ஸ்ருஷ்டியாகும்.இரண்டாவது பசு ஸ்ருஷ்டியாகும். தூய்மையான இறைவனுடைய தொடர்புடையதாக கூடியிருப்பது சிவ ஸ்ருஷ்டி எனப்படும். மலங்களினாலே சூழப்பட்டு தூய்மையான உயிராக இருப்பது பசு ஸ்ருஷ்டி எனப்படும். 7,8 மு-ப

சராசராதி பேதைஶ்ச க்ரீடதே பரமேஶ்வர: || க-அ
ஶிவஸ்ருஷ்டிம் ஸமாஸேன ஶ்ருணு ஸர்வாங்கஜானன |

எல்லாம் வல்ல இறைவன் அசையும் பொருள் அசையா பொருள் ஆகிய இவ்விரு வேறுபாடுகளினால் விளையாடுகிறான்.யானை முகத்தானே ! சிவ சிருஷ்டியை பற்றி சுருக்கமாக சொல்கிறேன் கேட்பாயாக. 8பி-ப,9மு-ப

ஶிவம் பராத்பரம் ப்ரஹ்ம அப்ரமேயமிதி ஸ்ம்ருதம் || க-கூ
அலக்ஷாநிர்திஷ்டம் ஜ்ஞேயமலக்ஷாநிர்திஷ்டம் |
அநௌபம்ய ஸர்வத்ருஶ்யம் லக்ஷணஞ்ச யதாவிதம் || க-க0

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வொசாதீதா தூரம் ஸூக்ஷ்மம் நிதுஜ்ஞாரண ஶூநுத: |
வூாவீகவா ஷவூமம் வெ்ராகூம் ஸ்வாஸிஸாவா தூஹூஸ்ஹூதி || க-கக
வாஜநொவூதிரிகூகவா தூசாணாதீதமொசுஸ் |

சிவம் என்பது மேலானதற்கும் மேலானதாகவும், பறந்து விரிந்து நிற்பதாகவும், அறிந்து கொள்ள முடியாததாகவும்,நிந்திக்கப் படாததாகவும், மலங்களின் தொடர்பு இல்லாத காரணத்தினாலேயே தன்னிலையில் உள்ளதாகவும், தன் போன்று வேறொன்று இல்லாததால் தனக்கு உவமை இல்லாததாகவும், குறைவு இல்லாததனால் அழிவு அற்றதாகவும், ஆகாயத்தை கடந்து இருப்பதன் காரத்தினாலேயே மிகுந்த நுட்பமானதாகவும்,காரணம் இல்லாததினாலேயே என்றும் இருப்பதாகவும்,எங்கும் நிறைந்திருப்பது என்ற தன்மையினாலேயே எல்ல பொருள்களிடத்திலும் இருப்பதாகவும்,எல்ல பொருள்களின் உரிமை உடையது என்ற காரணத்தினாலேயே ஆளுமை தன்மை உடையதாகவும், வாக்கிற்கும் மனதிற்கும் எட்டாமல் இருப்பதன் காரணத்தினாலேயே ப்ரமாணங்களைக் கடந்த ஞானத்தினாலே அறியப்படுவதாகவும் உள்ளது. 9பி-ப,10,11,12மு-ப

வ்ரதூக்ஷாதி வ்ரசாணாநி ஶூணு வத்ஸ ஸசாஹித: || க-கஉ
வ்ரதூக்ஷஉநுசாநஞ ஶஜ்லொவஃயா ஸஹ |
சுகூஹூாவதிரஹாவஙு ஷவ்சாணஜிதி ஸ்ஹூதி || க-கங

குழந்தாய் ! ப்ரத்யக்ஷம் முதலிய ப்ரமாணங்களை கவனமாக கேள்! ப்ரத்யக்ஷம், அனுமானம், சப்தம், உபமானம், அருத்தாபத்தி,அபாவம் ஆகிய ஆறும் ப்ரமாணங்கள் ஆகும். 12பி-ப,13

சுக்ஷாஜிகாரணைஉஹூஶூம் வ்ரதூக்ஷஜஜிஹொஹூதெ |
ஜிஹாஜிஹாஜி விஜ்ஞாநஉநுசாநஜிதி ஸ்ஹூதி || க-கச

எது கண் முதலிய புலன்களால் பார்க்கப்படக்கூடியதோ அது ப்ரத்யக்ஷம் எனப்படும். ஐம்புலன்களினால் அறிந்ததை வைத்து புலன்களுக்கு அப்பாற்பட்டதை அறிவது அனுமானம் எனப்படும். 14

சூவொக்ஷிவசுநெமஉூஶூம் ஶஜ்லெவ ஈஹாஹூதி |
தஸ்ஹாஉூஶூாஉூயாமஹூா ஹூவசா வெதி கீதிபூதா || க-கரு

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நம்பிக்கைக்கு உரியவர்கள் மொழியும் வேதாகம வாக்குகளும் சப்தம் எனப்படும். எவ்வாறு ஒன்று மற்றொன்றின் ஒப்புமையினாலே அறியப்படுகின்றதோ அது உபமானம் எனப்படும். 15

ஊவா ஹொஜநஊஷ்தீதி ஈாசௌள நாஷ்தீதி மஶுதெ |
ஊயெ௱ நெவாகூ௱ விஜ்ஞேயா வாகூ௱ாவபத்திரிதி ஷ்௱தஃ || க-கசு

பகலில் உணவு இருக்கிறது என்பதில் இருந்து இரவில் அது இல்லை என்று பொருள் தெரிகிறது.இவ்வாறு ஒரு பொருளினால் இன்னொரு பொருள் அறியப்படுவதற்கு அருத்தாபத்தி எனப்படும். 16

ஹ்ராந்தி ஜ்ஞாநெ ஹுஹாவெ து ஷ்வயஜ்ஞாநஞ மஶுதெ |
ஹ்ராஜூா ஹாவெ ஷ்வயம் ஜ்ஞாநஊஹாவஊிதி கீதிடூதஃ ||க-கஎ

பிராந்தி ஞானம் இல்லாததினால் ஞானம் தானாக தெரிகிறது என்கின்ற உண்மையிலிருந்து அறியப்படும் இல்லாமை என்ற ப்ரமாணம் அபாவம் எனப்படும், 17

ஊவஊாஊ வுஊாணெஷ்௱ உ௱ூகூஷுஜ்ஞூவம் ஷ்௱தஃ |
ஶிவதத்ஊஂ வெ௱ாகூஂ தகூா௱நாஊவிஊாதூநாஃ || க-கஅ

இம்மாதிரியான ப்ரமாணங்களினாலே அந்த சிவ தத்துவமானது அறியப்பட முடியாது.இத்தகைய சிவ தத்துவம் எல்லா தத்துவங்களுக்கும் மேலானதாக சொல்லப்படுகிறது. 18

ஷ்ருஷ்ட்யூஂ லொகரக்ஷாயூஂ லொகஷ்ருாத்திகாரணஃ |
ஸாயகாநாம் ஹிதாகூாய ஷெவ்யா ஶுஹ்ணதெ தநூஃ ||க-கசூ

படைப்பிற்காகவும், உலகத்தை காப்பதற்காகவும்,சாதகர்களுடைய நன்மைகளுக்காகவும், உலகப் படைப்பிற்கு காரணமான உடலை சிவமானது தானாகவே எடுத்துக்கொள்கிறது. 19

தச்சரீரம் க்ரியாஜ்ஞேயம் நிஷ்கலம் ஸகலநிஷ்கலஃ |
ஸகலஞ தயா ஜ்ஞேயம் க்ரியஞ விஶேஷதஃ || க-உ௦

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அந்த உடலானது நிஷ்களம், சகல நிஷ்காளம், சகளம் என்று மூன்று விதமாக அறியப்படுகிறது. அவ்வாறான அந்த மூன்றுவிதமான உடல்களும் சிறப்பாக அறியப்பட வேண்டும். 20

நிஷ்கலஞ்ச சதுர்பேதம் ஸகலஞ்ச ததா பவேத் |
ஸகலம் நிஷ்கலஞ்சைவ நவதா கீர்திதாः க்ரமாத் || க-உக

நிஷ்களம் நான்கு விதமான வேறுபாடுகளை உடையது. சகளமும் அவ்வாறே ஆகும்.சகள நிஷ்களம் ஒன்றையும் சேர்த்து ஒன்பது விதமாக முறையே சொல்லப்பட்டுள்ளது. 21

ஶிவதத்வாத் ஸஹஸ்ராம்ஶாச்சாந்திநாம்நா ஸமுத்பவா |
ஶாந்திஶ்சைதி பரா ப்ரோக்தா ஹ்யஸ்யாஸ்து பர்யாய வாசகः || க-உஉ

சிவனுடைய ஆயிரம் அம்சங்களில் ஒன்றாகச் சாந்தி தத்துவம் உண்டாயிற்று. இந்த சாந்தி தத்துவத்தை “பரா” என்று கூறுவர்.பரா என்பது சாந்தியை குறிக்கும் வேறு சொல்லாகும். 22

தஸ்யாஶ்சைவ ஸஹஸ்ராம்ஶாச்சக்திநாமா ஸமுத்பவா |
ஶக்திஶ்சைவ து வித்யா ச பர்யாயஸ்தஸ்யா ஹ்யுதः || க-உங

அந்த சாந்தி தத்துவத்தின் ஆயிரம் அம்சங்களில் இருந்து சக்தி என்ற பெயருடைய தத்துவமானது தோன்றுகிறது.சக்தி தத்துவமானது வித்யா என்ற தத்துவமாகவும் சொல்லப்படுகிறது. 23

தஸ்யாஶ்சைவ ஸஹஸ்ராம்ஶாந்நாதமூர்திஸ் ஸமுத்பவः |
நாதஸ்தஸ்ய ப்ரதிஷ்டா ச பர்யாயஶ்சேதி கீர்திதாः || க-உச

அந்த சக்தி என்ற தத்துவத்தின் ஆயிரம் அம்சங்களில் இருந்து நாதமூர்த்தி என்ற தத்துவமானது உண்டாயிற்று.நாதமூர்த்தி தத்துவம் நாதம் என்றும் பிரதிஷ்டா என்றும் வேறு சொற்களாலும் சொல்லப்படுகிறது. 24

தஸ்மாந்நாதாச்சதாம்ஶேந பிந்துதத்வஸமுத்பவः |
பிந்துஶ்சைவ நிவ்ருத்திஶ்ச பர்யாயஸ்தஸ்ய வாசகௌ || க-உரு

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அந்த நாத தத்துவத்தின் பத்தில் ஒரு பங்கிலிருந்து பிந்து தத்துவம் உண்டாயிற்று.பிந்துவும்,நிவ்ருத்தியும் பிந்து தத்துவத்திற்குரிய வேறு சொற்களாகும். 25

வாஸஂ ஹாவஂ ஸஊாஸஹூ ஸவூஜ்ஜுகூாஉிஹிமஃூணெ꞉ |

சுவூக்ஷாநி ச ஸூவாணி நிஷூூக்ஷூாநி க்ரியாஹூயா || க-உசு

உதஂகூூா நிஷ்களஂ ஹெூவஂ ஸிவதகூஂ ஸஜுூவூதெ |

ஷூாநவூஜாவிஹீநஸூ நிஷ்களகூஂ உிதீயகா || க-உஎ

ஐதூெவஂ நிஷ்களஂ வெூாக்ஷஂ வாஸஂ ஹாவஉிதி ஸூூதஃ |

தஸூாஜூணெகஹாமெந ஸாஉாவூஂ தத்ஜுூஜுவஃ || க-உஅ

நிஷ்கள தத்துவமானது நான்கு வகைகளாகச் சொல்லப்படுகிறது.அவை மேலான எண்ணத்தை (பாவத்தை) உடையது.சர்வக்ஞத்வம், (எல்லாம் அறிந்த தன்மை) முதலிய குணங்களினாலே புலன்களால் அறிய முடியாத உருவங்கள் உடையது, கண்ணுக்கு புலப்படாதது,செயலின்றி இருப்பது என்பனவாகும். நிஷ்கள தத்துவத்திற்கு த்யானம் பூஜை ஆகியன இல்லை. இது உயர்ந்த தத்துவமாக கருதப்படுகிறது.இந்த தத்துவத்தின் பத்தில் ஒரு பங்கினாலே சாதாக்யம் என்கின்ற தத்துவம் உண்டாகிறது. 26,27,28

ஷிஜவீஂவூகாரெண ஸாஉாவூஂ தத்ஜுவக்ஷணஃ |

ஷிஜெ ஸஂஹுஸ்ஸஜுூஜுூதொ நாஜூா ஸஉாஸிவெந து || க-உகூ

சாதாக்யம் என்கின்ற தத்துவத்தின் அமைப்பு,லிங்கம்,பீடம் என்கின்ற முறையில் உள்ளது.லிங்கத்தில் சம்புவானவர் சதாசிவன் என்ற பெயராலே உண்டாகிறார். 29

வீெ ஸக்திஸ்ஸஜுூஜுூதொ நாஜூா வெவ உநொநநீ |

ஷிஜெ ச வீகொயாஞ ஸக்திஸஂஹு ஸஜுூஜுவெள || க-ஙo

மனோன்மனி என்ற பெயருடன் பீடத்தில் உண்டாகிறாள். லிங்கத்திலும், பீடத்திலும் சம்பு, சக்தி இருவரும் தோன்றுகிறார்கள். 30

ஷிஜஞ வூஂஸ்லெவஂ ஸூாதஜீஂ ஷீகூவெவ ச |

நிஷ்களெள ஷிஜவீெள ச ஸகளெள ஸக்திஸாஂஹவெள || க-ஙக

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இம்மாதிரியாக லிங்கமானது ஆன் தன்மையை உடையதாக இருக்கும்.அதனுடய பீடமானது பெண் தன்மை உடையதாக இருக்கும்.லிங்கமும் பீடமும் நிஷ்களமாக இருக்கும். சக்தியும் சம்புவும் சகளமாக இருக்கும். 31

நிஷ்களஞு கஸா ஹீநா ஸகஉா தூ கஸாந்விதா |
யதீநாஞெவ ஃஜீணாம் ஜூாநிநாஞெவ யொகிநாம் || க-ங௨
ஞாநவூஜா நிமித்தாய ஸகஉனிஷ்கஉம் ஸூதம் |
ஜிஜவீம்வுகாரெண ஜெவெமம் வூஜயெத்ஸதா || க-ஙங

நிஷ்களம் என்பது கலைகள் இல்லாதது.சகளம் என்பது கலைகளோடு கூடியது. சன்யாசிகள், மந்திரங்களை வசப்படுத்தியவர்கள்,யோகிகள் ஆகிய அனைவரும் த்யானம், பூஜை, முதலியன செய்ய வேண்டியதை முன்னிட்டு சகள நிஷ்கள தத்துவங்கள் கருத்தப்பட்டுள்ளன.லிங்கம்,பீடம் என்ற முறையில் தேவர்களுக்கு எல்லாம் ஈசனான சிவனை எப்பொழுதும் பூஜை செய்ய வேண்டும். 32,33

கஷ்த்ரிம்மகல் கஸாயுக்தம் ஸகஉம் கவிதிவிஜ்ருதெ |
ஈமாதி ஸஜ்யவயூக்தம் கஷயெத்து ஸதாமிவம் || க-ஙச

முப்பத்தெட்டு கைகளோடு கூடியதாக சாகளம் என்கின்ற தத்துவம் இருக்கிறது. ஈச என்கின்ற மந்திரத்தில் தொடங்கி சத்ய என்ற மந்திரம் வரை உள்ளதான சதாசிவ மூர்த்தியை கற்பித்துக்கொள்ள வேண்டும். 34

ஈமாநெந து மந்த்ரெண வஞ்சமீயூ்ஷ வுகஷயெக் |
வுருஷெணைவ மந்த்ரெண சதுவூக்தும் வுகஷயெக் || க-ஙரு

ஈசானன் என்ற மந்திரத்தின் மூலமாக சதாசிவ மூர்த்திக்கு ஐந்து தலைகள் உடையதாக கற்பித்து கொள்ள வேண்டும்.புருஷ மந்திரத்தின் மூலமாக நான்கு முகம் உடையதாக கற்பித்துக் கொள்ள வேண்டும். 35

கவொரெணைவ மந்த்ரெண ஹூஜயாதீநி விநுஸெக் |
வாமதெவெந மந்த்ரெண மூஹ்யாதீநி வுகஷயெக் || க-ஙசு

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அகோர மந்திரத்தினால் இதயம் முதலியவற்றை நன்கு இட்டு வைத்தல் வேண்டும். வாமதேவ மந்திரத்தினால் குய்யம் (பிறப்புறுப்பு) முதலியவற்றை நன்கு கற்பித்துக் கொள்ள வேண்டும். 36

ஸஜ்யோஜாதென ஶஜ்ஞெண வாஊாஜூஜாநி கலயெகஃ |
கஷ குயொஉஸாஷெள வ வதுஃவஞ யயாகூஊ || க-௩எ
ஸஊவாஊவொஸஞ ஊ௸ஷெ ஸகூ௸ா ஜூதாஃ |
ஊவஞு ஸகஊஂ வெூாகூஂ ஸகஊஂ கூிதி நிஶஹிதஃ || க-௩அ

ஸத்யோஜாத மந்திரத்தினால் பாதம் முதலிய உறுப்புகளை கற்பித்துக் கொள்ள வேண்டும்.ஸத்யோஜாத மந்திரத்தின் மூலமாக எட்டுக் கைகளும், வாமதேவ மந்திரத்தின் மூலமாக பதிமூன்று கலைகளும், அகோர மந்திரத்தின் மூலமாக எட்டுக் கலைகளும்,புருஷ மந்திரத்தின் மூலமாக நான்கு கலைகளும், ஈசான மந்திரத்தின் மூலமாக ஐந்து கலைகளும் ஆக கலைகள் முப்பத்தெட்டாக சொல்லப்பட்டுள்ளன.சகளமானது இம்மாதிரி நிச்சயிக்கப்பட்டுள்ளது. 37, 38

கூவாஊாவயவாநி கலூநாஜ்ஸகஊஂ விஃஃ |
ஸாஊாவூ தத்ஷ ஊவெஶஂ வூதூகூஂ ஸவூதொஊவஃ || க-௩கூ

கை,கால் முதலிய உறுப்புகளை கற்பிப்பதினாலே சகளரும், சாதாக்ய தத்துவத்தின் ஈசனுமான சதாசிவரை வெளிப்படையாகவும், எல்லா பரிமாணங்கள் உடையவராகவும் அறிந்து கொள்கிறார். 39

ஐஜ்ஜாஶக்தூஜ்ஜவஂ வஜ்ஂ ஸஹஸ்ூஊஉஹஷிதஃ |
கணிூகாகெஸஶெயூகூஂ தகுஷ்ஂ ஹி ஸஊாஶிவஃ || க-சo

இச்சா சக்தியிலிருந்து உண்டானதும், ஆயிரம் இதழ்களினாலே அலங்கரிக்கப் பட்டதும், மொட்டு, மகரந்தைகளோடு கூடியிருப்பதுமான கண் வீற்றிருப்பவர் சதாசிவர் ஆவார். 40

வஞஊஷஹூா வதுவூகூஂ நெஜெுஷ்ஜூாஉஶஹியூதஃ |
வதுஶாஸூஞதுநூாஸஂ கஷ ஜொகுஞதுஶஹூஜஃ || க-சக
உஶஹுஜக்ஷஞஷெகஂ விவாஉஂ வஜ்ஸஂஹ்ஜிதஃ |
ஶுஊஸ்ஹிகஸஂகாஶஂ ஸுயூகொடிஸஉவூஹஃ || க-சஉ

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உந்நாஂஶூ ஶீதஷஂ ஷௌஶ்யஂ ஸவூாஹரணஹூஷிதழ |
ஶூக்ஷாஂவரயாரஂ ஜெவஂ ஶூக்ஷயஜ்ஞோபவீதிநழ || க-சஙு
ஶுஹயஂ ஶூஷவொரஶூஂ வஜ்ரஂ வஜ்ஜஞு உக்ஷிணெ |
வெடகாஂகூஶவாஶஞு வணா வரஉவாஃகெ || க-சச
ஐதெ்யதெஷூக்ஷணெயூக்ஷஂ ஸஉாஶிவஉிதி ஸ்யூதழ |

ஐந்து தலைகள்,நான்கு முகங்கள்,பன்னிரு கண்கள்,நான்கு வாய்கள், நான்கு மூக்குகள், எட்டு காதுகள், நான்கு கழுத்துகள், பத்து தோள்கள், ஓர் உடல், இரு திருவடிகள், ஆகியன கொண்டு தாமரைக்குள் இருபவராகவும், கோடி சூரியனுக்குச் சமமான ஒளியை உடையவராகவும்,அழகானராகவும், எல்லா வித அணிகலன்களால் அலங்கரிக்கப்பட்டவராகவும், வெண்ணிற ஆடை உடுத்தியிருப்பவராகவும், வெண்ணிற பூணுலை அணிந்தவராகவும், அவருடைய ஐந்து வலது கைகளுள் ஒரு கையால் அடைக்கலம்,நல்குபவராகவும்,(அபயம்) மற்ற கைகளால் சூலம், பரசு, வஜ்ரம், வாள், முதலியன தாங்குபவராகவும்,ஐந்து இடது கைகளுள் ஒரு கையால் வரம் நல்குபவராகவும், (வரதம்) மற்ற கையால் கேடயம்,அங்குசம்,கயிறு,மணி முதலியன தாங்குபவராகவும்,ஆகிய இத்தகைய தன்மைகளை உடையவர் சதாசிவர் ஆவார் என்று கருதப்படுகின்றது. 41,42,43,44,45மு-ப

தஸ்யைவ வாஉவாஸ்ஷூ து ஶூஉிஶக்திஉூநொநூ || க-சரு

அவருடைய (சதாசிவருடைய)இடது பக்கத்தில் ஆதிசக்தியான மனோன்மணி இருக்கிறாள். 45பி-ப

வஹ்நேரூஷ்ணகூவத்பக்திரவிநாஹாவிநீ விஹோஃ |
ஶக்திஹீநெ ஶிவொ நாஸ்தி ஶிவஹீநா ந ஶக்திகா || க-சசூ

எங்கும் நிறைந்திருப்பவரான சதாசிவருக்கு நெருப்புச் சூட்டின் தன்மை போன்று சக்தியானவள் இணை பிரியாமல் இருப்பாள்.சக்தி இல்லாமல் சிவன் இல்லை. சிவன் இல்லாமல் சக்தி இல்லை. 46

ஷதெ ஸஉஸ்துஜெவாஶ்ய ஶக்திஶஂஹூ ஃயா ஸ்யூதாஃ |
தஸ்யாஜ்ஜிவஃயஂ வைராக்ஷஂ ஜமஜெதச்ஜுராசாரழ || க-சஎ

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

எல்லா தேவர்களும் சிவ சக்தி மயமாக கருதப்படுகிறார்கள்.ஆகையால் இவ்வுலகில் உள்ள அசையும் அசையா பொருள்கள் அனைத்தும் சிவமயமாக சொல்லப்பட்டுள்ளன. 47

ஊகுவகுாஷு தூ ஹாூஷ்ூாம் ஸவூாஹாரணஹுஷிதாீ |
நிதம்பதட விஸ்தீணூாம் உஷெ்ரா கூஷாஉாம்ஷூநொரஷுதாீ || க-சஅ
வாஉாஜி மூக்ஷிகொவெதாம் உநொாநீம் ஸுலக்ஷணாீ |
ஷூாக்கூா ஸம்வாஜயெஙீாநு ஜமதீ்திகூாய வெ || க-சகூ

ஒரு முகத்தை உடையவளும்,நான்கு கைகள் உடையவளும்,எல்லா அணிகலன்களால் அலங்கரிக்க பட்டவளும் அகன்ற அல்குலை (நிதம்பத்தை) உடையவளும், இளைத்த (மெலிந்த) இடையே உடையவளும், உன்னதமான (மேலோங்கிய) மார்புகளை உடையினாலும், வாமை முதலிய சக்திகளை உடையவளும், நல்ல அழகு உடையவளுமான மனோன்மணியை புத்திமான் உலக மகிழ்ச்சிக்காக தியானித்து பூஜை செய்தல் வேண்டும். 48, 49

ஷுஹாஜெவெுவ விஜூாஜெவிூஜெரவெுவ மணெஷுவெ: |
ஸொகுவாஜெஷூஹஷெஙபவ கூஉஷெ ஸஜூவா: || க-ரும
தத்தூணாவூதாஷுவெூ தத்துஹுஸஉாயுதா: |
ஸவூாவயவஸம்வணூாஷுநஜாஜிது ஸவுஹா: || க-ருக
உதுஹுஜாஹீணெகுாபவ ஜடாஉகூடயாரிண: |
ஸஉாஶிவம் நஉஷூகூா தத்தஉாயுயாரிண: || க-ருஉ
நாநாவணூஸஉாயுக்தா நாநாஹாரணஹுஷிதா: |
நாநாமஙஸஉாயுக்தா நாநாவஷொவஶொஜிதா: || க-ருந
ஸஉாஶிவம் யஉாதூஷு தயா உாவூதஉெவதா: |
ஸூஉதூஷெஉஉதூஷூ வஜாம் கூயூாஜிஶெஷத: || க-ருச

ப்ரம்மங்கங்களிலிருந்தும் வித்யங்கங்களிலிருந்தும், வித்யேகவர்களும், கணங்களின் ஈஸ்வரரோடு கூட ஆயரக்கணக்கான லோகபாலர்களும், முறையே தோன்றுகிறார்கள். அந்தந்த குணங்களோடு கூடியவர்கள் எல்லோரும் அந்த அந்த அடையாளங்களோடு உடையவர்களாகவும்,எல்ல உறுப்புகளோடு முழுமையாக உள்ளவர்களாகவும், எண்ணில் அடங்காத சூரியனைப் போன்ற

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஒளி பொருந்தியவர்கள் ஆகவும்,நான்கு தோள்கள், மூன்று கண்கள் உடையவர்களாகவும், சடா முடியை உடையவர்கள் ஆகவும், சதாசிவரை வணங்கி அந்த அந்த ஆயுதங்களை கொண்டவர்களாகவும்,பலவித வண்ணங்கள் உடையவர்கள் ஆகவும், பலவிதமான அணிகலங்களினாலே அலங்கரிக்கப் பட்டவர்களாகவும், பலவிதமான வாசனையோடு கூடியவர்கள் ஆகவும், பலவிதமான மலர்களில் அழகாக இருப்பவர்கள் ஆகவும் உள்ளார்கள். சதாசிவர் எந்த முறையில் இருக்கிறாரோ அவ்வாறே அவரைச் சுற்றியிருக்கும் தேவர்களும் இருப்பார்கள்.சதாசிவர் உருவமில்லாது இருப்பாராகில் உருவம் இல்லாமலே பூஜையை சிறப்பாகச் செய்ய வேண்டும். 50, 51, 52, 53, 54

யஜி ஙிஜஷ்ூ கூதூவொ மஹூமெஹெ வூயக்ஷூயக் |
ஙிஜவெஷூவ தயா வீமெ ஊதூாஃநி விதிஙயெகஃ ||க-ருரு

லிங்கமாக இருக்கும்போது கருவறையில் தனித்தனியாக லிங்கமாகச் செய்ய வேண்டும். லிங்கம் இல்லாவிட்டால் அப்படியே மற்ற உருவங்களையும் மனதில் த்யானம் செய்துகொள்ள வேண்டும். 55

ஸவூாவரணஜெவாஂஶு ஸகூஙாநி ததஶ்ஸூணு |
ஊதூயபெஷுஶ்வூராஜூஷூ ஸகூஙஞ வூகீதிூத꞉ || க-ருசு

ஆவரண தேவர்களை பற்றியும் தேவதா தொடர்பான எல்லாவற்றையும் இப்பொழுது சொல்கிறேன் கேட்பாயாக ! ஈஸ்வரர் முதலிய உருவங்கள் சளர்களாவர். 56

யதூஷ்ஜாஶிவஂ வெூாகூஂ தஜீஶ்வூரஜூவூதெ |
யாஸாஂ ஜநொாநுநீ யஜீஶ்வூரீ தத்வஜூவூதெ || க-ருஎ

சதாசிவ தத்துவம் எதைப்போல சொல்லப்பட்டுள்ளதோ அதைப்போல ஈஸ்வர தத்துவம் சொல்லப்பட்டுள்ளது. மனோன்மணி எதைப் போலவோ அதைப் போலவே ஈஸ்வரியும் சொல்லப்பட்டுள்ளது. 57

வக்ஷூாஜூாவரணெ செவ வூவூவதூரிகூவூயெகஃ |
காஷுவொஹஶியா ஜூஜ்஝꞉ வூதிஜாஷூ வூகூவூயெகஃ || க-ருஅ

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

முன்பு போலவே ஆவாரணத்திலும் முகம் முதலியவற்றை செய்து கொள்ள வேண்டும்.மரம்,உலோகம்,கல்,மண் முதலியவற்றினால் உருவங்களை செய்து கொள்ள வேண்டும்.58

விஜூாதத்த்வஹ்ஸிதம் ஶ©ஹும் ஸவூாலஜ்ஞாரஸம்யுூதழ் |

ஜிஜ்ஜஸு கௌதுூகம் விஜூா்ஜ்ஜுகலம் க்ஷிதி ஐுூஷிஜாநு || க-ருகூ

வித்யா தத்துவத்தில் இருப்பவரும் எல்ல அலங்காரங்களோடு கூடி இருப்பவரும் லிங்கத்தினுடைய மங்களகரமான உருவத்தை உடையவருமாக இருக்கும் சம்புவை அறிவாளியானவன் சகளர் என்று அறிந்து கொள்ள வேண்டும். 59

ஜிஜ்ஜவூஜாவஸாநெ து ஈுஶ்வரம் வூஜயெத்ஜுாக |

ஈுஶ்வரஸு ஸஹஸ்ராஂஶாக ரூஷுஸெூாத்ஜவஶூஷுதெ || க-௬௦

லிங்க பூஜையின் முடிவில் ஈஸ்வரனை பூஜை செய்ய வேண்டும்.ஈசுவரனுடைய ஆயிரத்தில் ஒரு அம்சத்தில் இருந்து ருத்ரருடைய தோற்றம் சொல்லப்படுகிறது.60

சதுூஹுூஜஷ்ஜிணெசுஷ்டு சநூாகூகூத ஶெவாஃ |

விஜூு த்தூஜநிஸெரா ஜெவொ வாரஶூ ரூமயாரிகஃ || க-௬க

ஸவூாவயவ ஸம்வூணூஜஸவூாஹாரணஹூஷிதஃ |

நான்கு கைகள் உடையவரும், மூன்று கண்கள் உடையவரும், பிறை சந்திரனை சூடிய தலையை உடையவரும், மின்னல் கூட்டத்தைப் போன்று ஒளி பொருந்தியவரும்,பரசு (மழு) மான் முதலியவற்றை தரித்துக் கொண்டவரும், எல்ல உறுப்புகளோடு முழுமை பெற்றவரும்,எல்ல அணிகலங்களினாலே, அலங்கரித்துக் கொண்டவருமான தேவரானவர் ருத்ரர் அவர். 61, 62மு-ப

உமாஜெவூத்தநெ வாஶ்ஜூ ஸவூலக்ஷணஸம்யுூதா || க-௬உ

ருத்ரரின் இடது பக்கத்தில் உமாதேவி எல்ல லக்ஷணங்களோடு கூடியவளாக இருக்கிறாள். 62பி-ப

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஈஶ்வரஸ்ய து கோட்யம்ஶாத் விஷ்ணுஸ்தத்ரைவ கீர்திதஃ |
ஶ்யாமவர்ணஸ்ஸுரக்தாக்ஷஃ ஶங்கசக்ரதரோ ஹரிஃ || க-சுந
பீதாம்பரதரோ தேவ ஶ்ரீபூமிஸஹிதஸ்ததா |

ஈசுவரனுடைய கோடியில் ஒரு அம்சமாக விஷ்ணுவானவர் சொல்லப்படுகிறார். கருமை நிறத்தோடு இருப்பவரும், நல்ல சிவந்த கண்களை உடையவரும், மஞ்சள் நிற ஆடையை அணிந்திருப்பவரும், திருமகளோடும், நிலமகளோடும் கூடியிருப்பவரும் ஆனவர் ஹரி என்கிற தேவராவார். 63.64மு-ப

ஈஶ்வரஸ்ய து கோட்யம்ஶாத் ப்ரஹ்மணஸ்து ஸமுத்பவஃ || க-சுச
சதுர்புஜஶ்சதுர்வக்த்ரோ ஜடாமகுடதாரகஃ |
கமண்டல்வக்ஷமாலாட்யஃ பீதவர்ணஸ்ஸுரோத்தமஃ ||க-சுரு
ஸாவித்ரீ ஸஹிதஸ்தத்ர ஸ்ருஷ்டிகர்த்தேதி ஸ்ம்ருதஃ |
ஸ்திதிகர்த்தா து விஷ்ணுஸ்ஸ்யாத்ருத்ரஸ்ஸம்ஹாரகாரகஃ || க-சுசு

ஈசுவரனுடைய கோடியில் ஒரு அம்சத்திலிருந்து பிரம்மாவினுடைய தோற்றம் உண்டாகிறது. நான்கு கைகள் உடையவரும், நான்கு முகங்களை உடையவரும், சடை முடியிலான மகுடத்தை உடையவரும், கமண்டலத்தையும், அக்ஷமாலையையும், மஞ்சள் நிறத்தை உடையவரும், சாவித்ரியோடு கூடியவரும் ஆனவர் ப்ரம்மா ஆவார். இவர்களுள் ப்ரம்மா ஆனவர் படைப்பு கடவுளாக கருதப்படுகிறார். காக்கும் கடவுளாக விஷ்ணுவானவர் இருக்கிறார். ருத்ரர் அழிக்கும் கடவுளாவார். 64பி-ப , 65, 66

த்ரிமூர்த்தயோ விதாதா ப்ரஹ்மாண்டே ஸம்ப்ரவர்திதஃ |
நிஷ்களஸ்து லயஸ்தானாதிகாரம் ஸநிஷ்களம் || க-சுஎ

இம்மூன்று மூர்த்திகளும் (ப்ரம்மா,விஷ்ணு,ருத்ரர்) ப்ரம்மாண்டத்தில் புகழ் பெற்றவர்களாக இருக்கிறார்கள். நிஷ்களரானவர் ஒடுங்குகின்ற தத்துவத்திற்கு அதிகாரியாவார்.மேலும் கலா தத்துவதோடு கூடியவராவார். 67

போகஸ்தகலஶ்சைவம் ஸ்யாத்பயபோகாதிகாரவான் |
பரம் நிஷ்களமித்யுக்தம் பரம் ஸகலம் ஸ்ம்ருதம் || க-சுஅ

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இம்மாதிரி சகளரானவர் படைப்புக்கு அதிகாரியாக இருப்பவர் ஆகையால் இவர் லயத்திற்கும்,போகத்திற்கும் அதிகாரியாக இருப்பவர் ஆவார். நிஷ்களம் என்பது பரம் என்று சொல்லப்படுகிறது. 68

பராபரம் ததா ப்ரோக்தம் ஸகலநிஷ்கலம் பவேத் |
பராபரம் யதா ஜ்ஞாத்வா ஸமுக்த: பாஶ: பவேத் || க-௬௯

அவ்வாறே சகள நிஷ்களம் என்பது பராபரம் என்று சொல்லப்படுகிறது.அந்த பராபரத்தை உள்ளது உள்ளபடி அறிந்த சிவனானவன் பாசத்தை அறுத்தவனான முக்தன் ஆகிறான். 69

த்ரயஸ்து தேவதா: பஶ்சாத்த்ரயஸ்த்ரிம்ஶத் ஸமுத்பவா: |
ருத்ரைகாதஶ வஸவோஷ்டாவஸ்து த்வாதஶாதித்யஸம்யுதா: || க-௭௦
வஸவஶ்சாஶ்விநீபுத்ராஸ்த்ரயஸ்த்ரிம்ஶாதிதேவதா: |

முதலில் தேவர்கள் மூவர் ஆவார்.பிறகு முப்பத்து மூன்றாகத் தோன்றினார்கள். பதினோரு ருத்திரர்கள், பன்னிரண்டு ஆதித்யர்கள், எட்டு வசுக்கள்,இரு அஸ்வினி குமாரர்கள்,ஆக இவர்கள் முப்பத்திமூன்று அதி தேவர்கள் ஆவார்கள்.70,71மு-ப

ஸஹஸ்ர த்ரிம்ஶத்த்ரிம்ஶத்தேவதாஸ்து ப்ரகீர்த்திதா: || க-௭௧
ஶரீரம் பூதஸாரேண தேவாநாம் ஸ்ருஜதி வை |

இந்த முப்பத்திமூன்று அதி தேவர்கள் அவர்களுடைய உடல்கள் ஐந்து பூதங்களினுடைய சாரத்தினாலேயே முப்பத்தது முக்கோடி தேவர்களாக தோற்றம் பெறுகிறார்கள். 71பி-ப , 72 மு-ப

ஐஶ்வர்யமலஸம்பந்தாத் மோஹயஸ்து விநாஶயேத் ||க-௭௨
ஶிவஸ்ருஷ்டிரியம் ப்ரோக்தம் பஶுஸ்ருஷ்டிம் தத: ஶ்ருணு |

ஐஸ்வர்ய மலத்தினுடைய தொடர்பினால் உண்டான இதயத்தினுடைய அழுக்கான அறிவை அழிக்க வேண்டும்.இவ்வாறு சிவா ஸ்ருஷ்டியானது சொல்லப்பட்டது. பிறகு பசு ஸ்ருஷ்டியைப் பற்றி கேட்பாயாக. 72 பி-ப,72 ½ .

முதலாவதான சிவ ஸ்ருஷ்டி விதி படலம் முடிவுற்று

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

02 பசு ஸ்ருஷ்டி விதி படலம்

உ. வஶுஸ்ருஷ்டிவியிவடிலஃ

சுயாதஸ்ஸம்வ்ரவக்ஷ்யாஶி வஶுஸ்ருஷ்டிவியிக்ரஃ |
சுநாஶிக்வம் வஶுக்வஞு வ்ராஹ்யதெ ஶிவஶாஸநெ || உ-க

சிவ ஸ்ருஷ்டி விதி படலம் சொல்லி முடிக்கப் பெற்றிருக்கின்றது. ஆகையினால் அதன் பிறகு பசு ஸ்ருஷ்டி விதி வரிசையை நான் சொல்கிறேன். சிவ ஒழுங்கில் பசு அநாதியாக இருக்கும் தன்மையும், அதன் பொதுத்தன்மையும் சொல்லப்படுகின்றன. 1

ஶிவாத்து விஜ்யதெ உாத்மா ஜமக் ஸ்ருஷ்ட்யக்ஷூஜெவ து |
விஜ்யா தக்வாஶி யொமெந ஶூத்தத்தஜுஶீரிதஃ || உ-உ

சிவனைக்காட்டிலும் ஜீவாத்மா வேறுபட்டிருக்கிறது. ஆத்ம தத்வமானது உலக படைப்பிற்காக வித்யா தத்வம் முதலியவற்றோடு கூடச் சொல்லப்பட்டுள்ளது. 2

சுயாத்மா விஶஷஶ்ஶுஷோ ஶாயயா ஬க்ஷதெ ஸஹா |
ஸஹஜம் ஶஷஸம்஬ாநாத்வஶுரித்யுஹ்யதெ ஬ுயெஃ || உ-ந

பிறகு அழுக்கில்லாததும் சுத்தமானதுமான உயிர் எப்பொழுதும் மாயையினாலே கட்டப்படுகிறது. சகல மலசேர்க்கையினாலே அறிஞர்களினால் பசு என்று சொல்லப்பட்டது. 3

சுஶூதிஸ்து வஶுநிக்யொ நிமுணொநிஷ்க்ரியொ வ்ரஹுஃ |
ஶாயொஉரமதெ வ்யாவி ஹொமொவாயெஷு வதிஃ || உ-ச

உருவமில்லாத அந்த உயிரானது மாயையின் வயிற்றை அடைந்து பசுவாகவும், நித்யமானதாகவும், குணமில்லாததாகவும், செயலற்றதாகவும், முழு வல்லமை படைத்ததாகவும், எங்கும் நிறைந்து இருப்பதாகவும், போகங்களினுடைய உபாயங்களில் இருப்பதாகவும் உள்ளது. 4

ஸகெவஶஷ்க்திதி வ்ராக்தா ஸ்லாணவம் ஶஷ஬ாநாக் |
ஶூணவம் ஸஹஜம் வ்ராக்தம் துஷக்ம்஬ுகவத்துஶாக் || உ-ரு

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அது (மேற் குறிப்பிட்ட அமூர்த்தமான அந்தப் பசுவானது) ஆணவ மலசேர்க்கையினாலேயே கேவலம் என்று சொல்லப்படுகிறது.ஆணவம் சகச மலமாகும். நெல்லில் உள்ள உமி,தவிடு போன்று மலங்கள் முறையையே சொல்லப்பட்டன. 5

ஶொஹொ ஊஉஙு ஈாமஙு விஷாஉபெ்வேவ ஸொஷிதஃ |

ஹஷூகொ ஹி ச வெ விகூு ஸபெ்ஹெ ஸஹஜா ஊஙாஃ ||உ-சூ

மோகம், மதம், ஆசை, வருத்தம், இளைப்பு, மகிழ்ச்சி, விசித்திரம், ஆகிய ஏழும் சகச மலங்கள் எனப்படும். 6

ஸஹஜம் ஊலஸம்பநெ கெவலம் தஊஊாஹுதஃ |

ஸஹஜம் ஊஷிதுூஊாமஞுகூலம் ஶுணு || உ-எ

சகல மலத்தொடர்பில் அந்த கேவல ஆத்மா இவ்வாறு சொல்லப்படுகிறது. இவ்வாறாக சகல மலம் சொல்லப்பட்டிருக்கிறது.இனி ஆகந்துக மலம் பற்றி கேட்பாயாக ! 7

ஊயெயம் கஊஜபெ்வேவ விவியம் ஶிவஶாஸநெ |

ஶக்ூாகாவிலூநாவி கலாஊுவநியகூிதஃ || உ-அ

ஊயாயதூம் விஜாநீயா துணுவாவெபஙு கஊஜஃ |

சிவ ஒழுங்கில் (ஆகந்துக மலமானது) மாயேயம் கர்மசம், என இரு வகைப்படும். மாயையின் சக்தியினாலே கலை தத்துவம் முதல் அவனி தத்துவம் வரை சில தலைகள் (பந்தங்கள்) முதலியவை மாயைக்கு உட்பட்டு இருப்பதாக அறிந்து கொள்ள வேண்டும். புண்ணியங்களினாலும் பாவங்களினாலும் உண்டாகும் தலைகள் கர்மசமாக அறிந்து கொள்ள வேண்டும். 8, 9மு-ப

சூணவபெ்வேவ ஊயெயம் காஊஜஞு சியா ஹவெசு || உ-கூ

ஊவொஜூாநஜஊபெ்வேவ திரஸூாரகாரஸூயா |

மலம், அஞ்ஞானம், இருள், திரஸ்காரம், (ஞானத்தை மறைத்தல்,) மூர்ச்சை, (நினைவிழத்தல்) ஆவிருதி (மறைப்பு) அவித்தை,ஆகியன மலத்தை குறிக்கும் வேறு சொற்களாகும். 9பி-ப ,10 மு-ப

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வ்ருதிவத்திரவிஜ்ஞேதி ஊஉ வயபூரயவாசகாஃ ||உ-கо
த்ரிஉலெபடுஷ்கூடு வரத்கூா ஸகலஃ வரிவாஉிதஃ |
ஸகலபெஷதி பஷாதூா ஸம்ஸாரீ விஷயீ தயா || உ-கக

மலமானது ஆணவம்,மாயேயம்,கர்மசம்,என மூன்று வகைகளாக இருக்கும்.இந்த மூன்று மலங்களினாலே உயிர் கட்டுப்படுகிறது.அது சகலர் என்று சொல்லப்படுகிறது. மும்மலங்களால் கட்டப்பட்ட உயிரான சகலர் உலகத்தில் உய்பவராகவும் (சுவை,ஒளி,ஊரு,ஓசை,நாற்றம்) நுகர்ச்சியை உடையவராக ஆகிறார்.10பி-ப,11

கெஷத்ரீ கெஷத்ரஜ்ஞ ஹொக்தா ச பஶுர்ஜ்ஞாநீ தயெவ ச |
ஹொகீ செவ ஶரீரீ ச சூத்தவயபூரய வாசகஃ || உ-கஉ

க்ஷேத்ரி (உடலை உடையவர்) க்ஷேத்ரஞன்,(உடலை அறிந்தவர்)போக்தா (இன்ப துபை அனுபவங்களை உடையவர்)பசு ஞானி (உயிர் அறிவு உடையவர்) போகி (அனுபவங்களை உடையவர்)சரீரி (உடலை உடையவர்)ஆகிய இவையாவும் ஆன்மாவை குறிக்கும் வேறு சொற்களாகும்.12

சுஶீதிஶ்ச சதுஸ்செசெவ ஶதஸ்லாஹஸ்ரஹெஉகெஃ |
ஸம்வ்ராஜ்ஞா யொநிஹெஉஸ்து ஜீவநாமூா து தசு வெ || உ-கந

எண்பத்து நான்குலக்ஷம் பேதங்கள் மூலமாக யோனி பேதங்கள் ஜீவன் என்ற பெயரோடு அடைந்தன. 13

வ்ராக்தா து ஸகலாவஸ்தா ஶுஷாவஸ்தா ததஶ்ஶுணு |
உலாநாம் நாஶநாகூபூரய சுநூத்துக்தி நிவாததஃ || உ-கச

இதுவரை சகலருடைய நிலையை பற்றி சொல்லப்பட்டது.இனி சக்திநிபாதத்தின் மூலமாக மும்மலங்களை அழிப்பதின் பொருட்டு சுத்தான்மா நிலை பற்றி கேட்பாயாக ! 14

யாவச்சுக்தி நிவாதாஙம் தாவஉஜ்ஞாநவெஉநீ |
வரிவாகஉபூாணி ஸவபூாணி ஸஉகெ ஶக்திவாதநெ || உ-கரு

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பசு எதுவராய்க்கும் சக்திநிபாதத்தினுடைய தன்மை அடைகிறதோ அதுவரைக்கும் அஜ்ஞானத்திற்கு உட்பட்டதாக அறிவு இருக்கும். சக்திநிபாதம் வந்தவுடன் முற்பிறவியில் செய்யப்பட்ட எல்லாவிதமான நல்வினைகள் தீவினைகள் சமமாக ஆகி விடுகின்றன.15

ஸதா³ஶிவத்வாபேக்ஷ்ய ஶிவே ப⁴க்திர்ப⁴வேத்³யதா³ |
ததா³ தீ³க்ஷாம் ப்ரவிஜ்ஞாய பூஜாஞ்சைவ து ப⁴க்தித: || உ-கசு
யோகா³ப்⁴யாஸம் தத: க்ருத்வா ஜ்ஞாநதந்த்ரம் ததா³ப்⁴யஸேத் |
ததா³ ஜ்ஞாநாந்த⁴காரஞ்ச ஜ்ஞாநதீ³பேந நாஶயேத் || உ-கஎ

சதாசிவராக இருக்கும் தன்மையை குறித்து சிவனிடத்தில் எப்பொழுது பக்தி உண்டாகிறதோ அப்பொழுது தீக்ஷையை பெற்று பக்தியின் மூலமாக பூஜைகளையும், யோக பயிற்சிகளையும், ஞான தந்திரத்தையும் கற்க வேண்டும். அப்பொழுது ஞானம் என்ற விளக்கினாலே அக்ஞானம் என்கின்ற இருட்டை அழிக்க வேண்டும். 16, 17

ஸ்வபா⁴வஶுத்³த⁴ம் தஜ்ஜ்ஞாநம் ஸ்வபா⁴வஞ்சு ததா²த்மந: |
ஶ்யாமநீலாதி³ ஸம்ப³ந்தே⁴ ஸ்ப²டிகம் தத்³வதே³வ ஹி || உ-கஅ
ததை²வாதிப்ரயத்நேந ஶுத்³த⁴ஸ்ப²டிகவத்³ப⁴வேத் |
க⁴டஸ்தோ² யதா² தீ³போ க⁴டநாஶே து தீ³ப்யதே || உ-க௯
க⁴டாந்தஸ்தோ² யதா² பா⁴நுர்த்³ருஶ்யேத வாபி ததா² ப⁴வேத் |
தத்³வந்மலத்ரயாதா³ந: பரிகீர்திதௌ || உ-உ0

